اللغة التاملية

# زيارة الأماكن الأثرية

## وحكمها في الإسلام

## இஸ்லாத்தின் பார்வையில்

# புராதன இடங்களைத் தரிசித்தல்


ஆக்கம்

ஸு லைமான் பின் ஸாலிஹ் அல் ஜர்பூஃ

தமிழில்

M. அஹ்மத் (அப்பாஸி)

மீள்பரிசீலனை

M. J. M. ரிஸ்மி (அப்பாஸி)

M. S. M. இம்தியாஸ் (நளீமி)

## பொருளடக்கம்


| | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | பொருளடக்கம் | 01 |
| 2 | அணிந்துரை | 02 |
| 3 | முன்னுரை | 04 |
| 4 | அல் ஆஸார் என்பதன் பொருள் | 09 |
| 5 | சுவடுகளின் வகை | 09 |
| 6 | அறிவிக்கப்பட்ட செய்திகள் | 10 |
| 7 | தரிசித்த இடங்கள் | 11 |
| 8 | அந்த இடங்களை நாடிச் செல்வதின் சட்டம் | 20 |
| 9 | புராதன இடங்களின் இரண்டாவது வகை | 26 |
| 10 | நபியவர்கள் சரீரம் சம்பந்தப்பட்ட சுவடுகள் | 35 |
| 11 | துணை நின்றவை | 39 |

அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன், அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கிறேன்

அஷ்ஷேஹ் ஸாலிஹ் அல் பௌ(f)ஸான் அவர்கள் வழங்கிய

## அணிந்துரை

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே,

அஷ்ஷேஹ் ஸுலைமான் பின் ஸாலிஹ் அல் ஜர்பூஃ அவர்கள் எழுதிய "**இஸ்லாத்தின் பார்வையில் புராதன இடங்களைத் தரிசித்தல்**" என்ற சிறு நூலைப் பார்வையிட்டேன். (இம்) மார்க்கத்தின் தலையெனப்படும் அகீதாவுக்கு[1] பாதிப்பு ஏற்படுத்தும் (இது போன்ற) புராதன இடங்களை உயிர்ப்பித்து அதன் மூலம் பெருமை பாராட்டிக்கொள்வதில் மக்களுக்கேற்பட்டுள்ள சிக்கல்களிலிருந்து விழிப்பூட்டுவதற்காக (இதனை) வெளியிட்டு, விநியோகம் செய்வதற்கு மிகவும் தேவையான, பயனுள்ள ஓர் அம்சமாக (இதனை) நான் கண்டு கொண்டேன். (இதை) எழுதி,

(1) அகீதா என்பது ஒரு மார்க்கத்தின் அடிப்படைக் கொள்கையைக் குறிக்கின்றது.

தெளிவுபடுத்தியதற்காக வேண்டி அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக.

எங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தார், தோழர்களுக்கும் அல்லாஹ் சாந்தி, சமாதானம் அருள்வானாக.

எழுதியவர்
ஸாலிஹ் பின் பௌஸான் அல் பௌஸான்
1429/4/21 ஹி

## முன்னுரை

இறைவா! உன்னிடத்தில் உதவியையும், அனுகூலத்தையும், நல்வாய்ப்பையும் கேட்கிறேன், நிச்சயமாக நீ உயிரோடு நிலையாக நிற்பவனும், அனைத்தின் மீதும் சக்தி பெற்றவனுமாவாய்.

அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், அவன் எங்களுக்கு (இஸ்லாத்தை) மார்க்கமாக்கி, அதனைப் பரிபூரணப்படுத்தி, எமக்காக அதனைப் பொருந்திக் கொண்டான்.

அகிலத்தாருக்கு அருட்கொடையாகவும், ஆதாராமாகவும், அனுப்பப்பட்ட, குரைஷிக் கோத்திரத்தில் ஹாஷிம் குடும்பத்தைச் சேர்ந்த முஹம்மத் பின் அப்துல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக! எங்களை அவர் தெளிவான பாதையில் விட்டுச் சென்றார். அப்பாதையின் இரவு அதனுடைய பகலைப் போன்று தெளிவாக இருக்கும். யார் அதைப் பின்பற்றுகின்றாரோ அவர் ஈடேற்றமடைவார். யார் அதை விட்டும் திரும்பி வேறு பாதையில் செல்கிறாரோ அவர் அழிந்து விடுவார்.

எங்கள் நபியின் தோழர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக! அவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும், முஸ்லிம் தலைவர்களுக்கும், ஏனைய முஸ்லிம்களுக்கும் நலவு நாடக்கூடியவர்களாக இருந்தார்கள். எங்கள் நபியின் சுவடுகளைப் பின்பற்றினார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக!

இறைத்தூதர்களில் முதலாமவர் தொடக்கம் இறுதித்தூதர் வரை அனைவரும் இரண்டு பிரதான விடயங்களை நிலைநாட்ட அனுப்பப்பட்டார்கள் :

1) அல்லாஹ்வை விசுவாசங்கொள்வதும் , அதற்குத் துணை நிற்பவைகளையும், அதன் பக்கம் வழி காட்டக்கூடியவைகளையும் நிலைநாட்டுதல்.
2) இணை வைத்தலையும், அதன்பால் இட்டுச்செல்லும் வழிகளையும் விட்டு விடுதல்.

இதற்கு ஆதாரமாக பின்வரும் இறைவசனத்தைக் குறிப்பிடலாம் :

﴿ وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَّسُولًا أَنِ اعْبُدُوا اللَّهَ وَاجْتَنِبُوا الطَّاغُوتَ ﴾النحل: ٣٦

"அல்லாஹ்வை வணங்குங்கள். மேலும் அல்லாஹ் அல்லாது வணங்கப்படும் தாகூத்தை விட்டு, விலகிக் கொள்ளுங்கள், எனக் கூறும் தூதரை ஒவ்வொரு சமூகத்திலும் நிச்சயமாக நாம் அனுப்பி வைத்தோம்". (அல்குர்ஆன் - 16:36)

மனித வரலாற்றில் ஏற்பட்ட மிகப் பெரிய சரிவு, தடம்புறழ்வு, அல்லாஹ்வுக்கு இணைவைத்து, அவனுடன் சேர்த்து அவன் அல்லாதோரை வணங்குவதாகும். இதன் காரணமாகத்தான் இறைத்தூதர்களை அனுப்புவதன் பிரதான குறிக்கோளாக இணைவைத்தலை ஒழிப்பதும், மக்களை ஏகத்துவத்தின்பால் மீட்டெடுப்பதும் அமைந்திருந்தது. அல்லாஹ் கூறுகிறான் :

﴿ وَمَا أَرْسَلْنَا مِن قَبْلِكَ مِن رَّسُولٍ إِلَّا نُوحِي إِلَيْهِ أَنَّهُ لَا إِلَٰهَ إِلَّا أَنَا فَاعْبُدُونِ ﴾ الأنبياء: ٢٥

"நிச்சயமாக என்னைத் தவிர உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் வேறு யாருமில்லை. எனவே என்னையே வணங்குங்கள். என நபியே நாம் உமக்கு முன்னர் எந்தத் தூதருக்கும் வஹீ அறிவிக்காமல் அவரை நாம் அனுப்பியதில்லை." (அல்குர்ஆன் – 21:25)

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் : "நான் இறுதி நாள் நெருங்கும் சமயத்தில் அல்லாஹ்வுக்கு இணைவைக்காமல் அவன் மாத்திரம் வணங்கப்படுவதற்காக, வாளைக் கொடுத்து அனுப்பப்பட்டுள்ளேன். என்னுடைய ஆகாரம் எனது ஈட்டி நிழலில் வைக்கப்பட்டுள்ளது. எனது கட்டளைக்கு மாறு செய்பவர்களுக்கு இழிவும், சிறுமையும் ஏற்படும். யார் பிற சமூகத்திற்கு ஒப்பாகுகிறாரோ அவர் அச்சமூகத்தைச் சேர்ந்தவராவார். (1) "

(1) இந்த நபிமொழி : அஹ்மத் (2/50), இப்னு அபீ ஷைபா (4/212), அப்து பின் ஹுமைத் (1/267) ஆகிய ஹதீஸ் கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளது. அறிஞர் அர்னஊத் இந்நபி மொழி பலவீனமானது என்று கூறியுள்ளார். அறிஞர் அல்பானி அவருடைய "இர்வாஉல் கலீல்" என்ற நூலில் "ஹஸன்" என்ற தரத்தில் உள்ளதாகக் கூறியுள்ளார்.

மேற்கூறப்பட்ட இறைவசனமும், நபிமொழியும் தூதர்களை அனுப்பியதன் பிரதான நோக்கம் இணையை ஒழித்து, மக்களை ஏகத்துவத்தின்பால் மீட்டெடுப்பதுதான் என்பதை தெளிவாகக் கூறுகின்றன. ஏனென்றால் இந்த இணைவைத்தல் அந்த அளவுக்கு மிக மோசமானதும், அடியார்களுடைய இம்மை, மறுமை வாழ்க்கையில் இது மிக அபாயகரமானதுமான செயல் என்பதனால் தான் இந்த அளவுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தொகுப்பில் -இன்ஷா அல்லாஹ்- நபி ஸல் அவர்கள் அறிவித்துச் சென்ற, தரிசித்த, பாவித்த சுவடுகளைப் பற்றியும், இஸலாத்தின் பார்வையில் அதன் சட்டத்தையும், இவ்விடயத்தில் நபித்தோழர்களின் நிலைப்பாட்டையும் விளக்கவுள்ளோம்.

சக்தி வாய்ந்த அல்லாஹ்விடம் உதவியையும், நல்வாய்ப்பையும் கேட்கிறேன்.

**ஆஸார் (آثار) என்பதன் பொருள் :**

ஆஸார் آثار என்ற அறபுப்பதம் அஸர் أثر என்ற சொல்லின் பன்மையாகும். இது ஒரு பொருளுடைய எஞ்சிய பகுதியைக் குறிக்கின்றது.([1]) அதாவது முன் சென்றவர் பின் வருவோருக்கு விட்டுச் சென்றவற்றைக் குறிக்கும்.

**நபி (ஸல்) அவர்கள் விட்டுச் சென்ற சுவடுகளின் வகைகள்:**

நபி (ஸல்) அவர்கள் விட்டுச் சென்ற சுவடுகள் மூன்று வகைப்படும் :

I. அவர்களால் அறிவிக்கப்பட்ட செய்திகள்.
II. அவர்கள் தரிசித்த இடங்கள்.
III. அவர்கள் பாவித்த (அவர்கள் சரீரம் சம்பந்தப்பட்ட) சுவடுகள்.

(1) அல் காமூஸுல் முஹீத் என்ற அறபு அகராதியிலிருந்து பெறப்பட்டது.

**1. நபி ஸல் அவர்களால் அறிவிக்கப்பட்ட செய்திகள் :**

இது அவர்களுடைய பொன்மொழிகளும், ஸுன்னாவுமாகும். இந்த வகைக்கு முக்கியத்துவம் அளித்து, அதனைப் பேணிப் பாதுகாத்து, அதன் படி செயற்படுவது கடமையாகும். இறைவன் திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான் :

﴿ وَمَآ ءَاتَىٰكُمُ ٱلرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَىٰكُمْ عَنْهُ فَٱنتَهُوا۟ ﴾ الحشر: ٧

"இத்தூதர் உங்களுக்கு எதை வழங்கினாரோ அதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதை உங்களுக்குத் தடுத்தாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்". (அல்குர்ஆன் - 59:07)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "நீங்கள் என்னுடைய வழிமுறையையும், எனக்குப் பின்னால் வரும் நேர்வழி பெற்ற

கலீபாக்களுடைய(1) வழிமுறையையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் (2)."

**2. நபி ஸல் அவர்கள் தரிசித்த இடங்கள்:**

இது இரு வகைப்படும் :

<u>முதலாவது வகை :</u>

- தொழுகையை நிறைவேற்றுவதை நபியவர்கள் ஷரீஅத்தாக(3) ஆக்கிய மஸ்ஜிதுகளைத் தரிசித்தல்.
- நபியவர்கள் தொழுத மஸ்ஜிதுகள், ஆனால் மற்றவர்களை அதில் தொழத்தூண்டுவது சம்பந்தமாக எந்த ஆதாராமும் வரவில்லை.

---

(1) கலீபாக்கள் என்ற பதம் ஆட்சித் தலைவர்களைக் குறிக்கின்றது.

(2) ஆதாரம் : அபூதாவுத், திர்மிதி, இப்னு மாஜா, தாரமி, அஹ்மத்.

(3) ஷரீஅத் என்ற பதம் மார்க்கம் என்ற பொருளைக் குறிக்கின்றது.

<u>இரண்டாவது வகை :</u>

புராதன இடங்கள், நபியவர்கள் தாண்டிச் சென்ற இடங்கள், அல்லது தரிசிப்பதை மார்க்கமாக்கிய இடங்களைத் தரிசித்தல்.

அதன் விரிவான சட்டம் பின்வருமாறு :

**முதலாவது வகை :**

- நபியவர்கள் தொழுகையை மேற்கொள்வது மார்க்கமெனக் கூறிய, அல்லது நபியவர்கள் தொழுத மஸ்ஜிதுகளைத் தரிசித்தல். இவ்வகையை நபியவர்களைத் தொட்டும் சரியான அறிவிப்பாளர் வரிசை மூலம் அறிவிக்கப்பட்டதைக் கொண்டு மாத்திரமே அறிய முடியும்.

நபியவர்கள் தொழுகையை மேற்கொள்ள சிறப்பித்துக் கூறிய மூன்று மஸ்ஜிதுகள் :

I. அல் மஸ்ஜிதுந் நபவி.
II. அல் மஸ்ஜிதுல் ஹராம்.
III. அல் மஸ்ஜிதுல் அக்ஸா.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "மஸ்ஜிதுல் ஹராம், என்னுடைய இந்த மஸ்ஜித் (மஸ்ஜிதுந் நபவி), மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்று பள்ளிகளைத் தவிர அதிக நன்மையை எதிர்பார்த்துப் பயணம் மேற்கொள்ளக் கூடாது. (1) "

- ஸஹீஹான ஆதாரங்களின் அடிப்படையில் நபியவர்கள் தொழத்தூண்டாத மஸ்ஜிதுக்கள், இடங்களைப் பொறுத்தவரை - அந்த இடத்தால் நபியவர்கள் நடந்து சென்றாலும், உட்கார்ந்தாலும், அல்லது அவ்விடத்தில் தொழுதாலும்- அவ்விடங்களை வணக்கஸ்தலங்களாகக் குறிப்பிட்டு எடுக்க முடியாது.

ஏனெனில் அது போன்ற இடங்களில் தொழுவதால் குறிப்பிட்ட நன்மை இருக்குமென்றோ, அல்லது நபியவர்கள் அவ்விடங்களில் தொழுகை மேற்கொள்ளும் படி தூண்டியதாகவோ ஸஹீஹான எந்தவித அறிவிப்பும் கிடையாது. மேலும் தரிசிப்பதற்காகவோ, வேறு நோக்கங்களுக்காகவோ அவ்விடங்களை நாடலாகாது. இணைவைப்பின்

(1) அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி), ஆதாரம் : புஹாரி (1189), முஸ்லிம் (1397).

பக்கம் இட்டுச்செல்லும் வழிகளை அடைப்பதற்காகவே இது தடுக்கப்பட்டுள்ளது.

மனித உள்ளங்கள் அவ்விடங்களை நாடிச் சென்று, அங்கு வணங்கவும், அவ்விடங்களைத் தாண்டிச் செல்லும் போது அதை ஒரு ஸுன்னாவாக எடுத்துக் கொள்ளவும் முற்படும். ஆனால் எவ்வித ஐயமுமின்றி இது அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் நுழைந்த பித்அத்துக்களாகும். (1)

வணக்கங்களின் அடிப்படை, அவற்றை ஆதாரம் உள்ளவற்றுடன் நிறுத்திக் கொள்வதுதான். யார் அல்லாஹ்வை ஆதாரமில்லாத ஒரு செயலின் மூலம் வணங்குகின்றாரோ அவ்வணக்கம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அது நிராகரிக்கப்பட்டு விடும். அவர் மார்க்கத்தில் புதிய ஒரு பித்அத்தை செய்தவராவார்.

பித்அத் என்பதற்கு இமாம் ஷாதிபி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகிறார்கள் : "அது மார்க்கத்தில் புதிதாகக்

(1) பித்அத் என்பது இஸ்லாத்தில் நபி (ஸல்) அவர்கள் காட்டித்தராத செயல்களை வணக்கமாக எண்ணிச் செய்தல்.

கண்டுபிடிக்கப்பட்ட வழிமுறையாகும். அது ஷரீஅத்திற்கு ஒப்பானதாக இருப்பதோடு, அதைச் செய்வதன் மூலம் அளவுக்கதிகமாக அல்லாஹ்வை வணங்குவதே நாடப்படுகின்றது. (1)

ஷெஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : "நபியவர்கள் ஹிராக்குகையில் இறைவனை வணங்கியது அவர்களுக்கு நபித்துவம் கிடைப்பதற்கு முன்னர்தான். பின்பு அல்லாஹ் அவரை நபித்துவத்தின் மூலமும், ரிஸாலத்தின் (2) மூலமும் கண்ணியப்படுத்தி, படைப்பினங்கள் அவரை விசுவாசம் கொண்டு, அவருக்குக் கட்டுப்பட்டு, அவரைப் பின்பற்ற வேண்டும் என்றும் கடமையாக்கிய போது, அவரும், அவரை ஏற்றுக்கொண்ட சிறந்த சமுதாயமான ஆரம்பகால முஹாஜிரீன்களும் சுமார் 10 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் மக்காவில் தரித்திருந்தார்கள். அச்சமயத்தில் நபியோ, அல்லது அவருடைய தோழர்களோ யாரும் அந்த ஹிராக்குகைப் பக்கம் செல்லவில்லை.

(1) அல் இஃதிஸாம் - 1/37

(2) ரிஸாலத் என்பது தூது என்ற பொருளைக் குறிக்கும்.

பின்பு நபியவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா சென்றார்கள். அங்கிருந்து 4 தடவை உம்ராச் செய்ய வந்தார்கள். நபியுடன் சேர்ந்து பெரும்பான்மையான முஸ்லிம்கள் ஹஜ் செய்தார்கள். அல்லாஹ் நாடிய ஒரு சிலரைத் தவிர வேறுயாரும் நபியுடன் ஹஜ் செய்ய பின் வாங்கவில்லை. இவ்வனைத்து சநதர்ப்பங்களிலும் நபியோ, அல்லது தோழர்களோ யாரும் ஹிராக்குகைப் பக்கமோ, அல்லது மக்காவிலுள்ள ஏனைய இடங்களுக்கோ வரவோ, அல்லது தரிசிக்கவோ இல்லை.

அதே போன்றுதான் அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள குகை :

﴿ ثَانِيَ ٱثۡنَيۡنِ إِذۡ هُمَا فِي ٱلۡغَارِ ﴾ التوبة: ٤٠

"குகையில் இருவரில் ஒருவராக இருந்த போது....." (அல்குர்ஆன் - 9:40)

இக்குகை மக்காவில் ஸௌர் எனும் மலைத்தொடரில் அமைந்துள்ளது. அக்குகையை நாடிப் பிரயாணம் மேற்கொள்வது, அதைத் தரிசிப்பது, அதில் தொழுது, பிரார்த்தனை புரிவது போன்ற எந்த ஒன்றையும் நபியவர்கள் தமது சமூகத்திற்கு மார்க்கமாக அறிமுகப்படுத்தவில்லை.

நபி (ஸல்) அவர்கள் மக்காவிலே மஸ்ஜிதுல் ஹராத்தைத் தவிர வேறு மஸ்ஜிதுகளைக் கட்டவில்லை. மாறாக நபியவர்கள் பிறந்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜிதோ, அல்லது ஏனைய மஸ்ஜிதுகளோ அனைத்தும் புதிதாக உருவாக்கப்பட்டதே. நபியவர்கள் பிறந்த இடத்தை தரிசிப்பதையோ, அல்லது மினாவுக்குப் பின்னாலுள்ள அகபா(1) நடந்த இடத்தைத் தரிசிப்பதையோ அவர்கள் தமது சமூகத்துக்கு மார்க்கமாக்கவில்லை. ஆனால் தற்போது அவருக்காக அவ்விடத்தில் ஒரு மஸ்ஜித் கட்டப்பட்டுள்ளது.

இவை، அல்லாஹ் கூலி தரக்கூடிய, விரும்பத்தக்க, மார்க்கத்தில் உள்ளதாக இருந்தால் அதனை அதிகம் அறிந்து, செயல்படுத்துவதில் தீவிரம் காட்டக்கூடியவராக நபி (ஸல்) அவர்கள் தான் இருந்திருப்பாரகள். மேலும் தமது தோழர்களுக்கும் கற்றுக் கொடுத்திருப்பார்கள். நபித்தோழர்கள், அவர்களுக்குப் பின்னால் வந்தவர்களை விட அவ்விடங்களை அதிகம் அறிந்தவர்களாகவும், அதனை செயல்படுத்த அதிக

(1) அகபா என்பது நபியவர்களுக்கும், மதீனாவைச்சேர்ந்த அன்ஸாரித் தோழர்களுக்கும் மத்தியில் நடந்த உடன்படிக்கையாகும்.

அக்கறையுள்ளவர்களாகவும் இருந்தார்கள் என்பது அறியப்பட்ட விடயமாகும்.

அவர்கள் யாரும் அவைகளில் எந்தப் பகுதியையும் திரும்பிக்கூடப் பார்க்காததால், அது போன்ற விடயங்கள் அவர்கள் வணக்கமாக, இறைவனின் பால் நெருக்கமாக்கக்கூடிய வழிபாடாகக் கணிக்காத, மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பித்அத்துக்களில் உள்ளதென்பது அறியப்பட்டுவிட்டது. யார் அதனை இறைவனின் பால் நெருக்கமாக்கக்கூடிய வணக்க வழிபாடாகப் பயன்படுத்துகிறாரோ அவர் நபியவர்களும், அவரது தோழர்களும் செல்லாத பாதையைப் பின்பற்றியவராவார். மேலும் அல்லாஹ் உத்தரவிடாத விடயங்களை மார்க்கத்தில் உருவாக்கியவராவார்.

நபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் கிடைத்த, அல்குர்ஆன் இறங்கிய, இஸ்லாத்திற்கு முன் அவர்கள் அல்லாஹ்வை வணங்கிய அந்த ஹிராக்குகை, மற்றும் அல்லாஹ் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களுக்கு அமைதி இறக்கிய, அல்குர்ஆனில் சொல்லப்பட்ட இது போன்ற குகைகளில் நபிகளாரின் தகுதிக்கே இந்தச் சட்டம் என்றால், ஸஹீஹான அறிவிப்பின் மூலம் அறியப்பட்ட ஏனைய நபிமார்களின் இடங்களை

நாடிச்செல்வதோ, பிரயாணம் மேற்கொள்வதோ, தொழுகை, பிரார்த்தனை போன்ற வணக்கங்கள் செய்யச் செல்வதோ அறவே கூடாது என்பது அறியப்பட்ட விடயமே. அதுவே பொய்யென அறியப்பட்டால், அல்லது சரியான அறிவிப்பு என நிரூபனமாகாவிட்டால் அதனுடைய நிலமை எப்படி? (1)

(ஆசிரியர் கூறுகிறார்) நான் கூறுகிறேன் : இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் சுட்டிக்காட்டிய அந்த இடங்களைத் தரிசிப்பதை மக்கள் வணக்கமாக, அடியானுக்கு நன்மை வழங்கப்படும் ஸுன்னாவாக எடுத்துக் கொண்டதைப் பார்த்து நீர் ஆச்சரியப்படுகின்றீர். அதிக முஸ்லிம்களுக்கு மறைந்திருக்கக்கூடிய (தெரியாத) இது போன்ற விடயங்களில் கவனமெடுப்பது ஒவ்வொரு முஸ்லிமான ஆண், பெண் மீதும் கடமையாகும்.

(1) அல் இக்திழா - 2/806, 807

**அந்த இடங்களை நாடிச்செல்வதின் சட்டம்:**

குறிக்கோள்களுக்கு என்ன சட்டமோ, அதன் வழிவகைகளுக்கும் அதே சட்டம் தான். ஏனென்றால், இணைவைப்பின்பால் இட்டுச் செல்லும் வழிகளை தடுக்காமல் விட்டுவிட்டு இணைவைப்பை மாத்திரம் எவ்வாறு தடை செய்வான்? அவ்வாறு யாராவது எண்ணினால் அது மதியீனம். அல்லாஹ்வுக்கு உயர்வான உதாரணம் உண்டு. மேலும் நிரப்பமான அறிவு ஞானமும் அவனுக்கே உள்ளது. அவன் இணைவைப்பின்பால் இட்டுச் செல்பவைகளை மார்க்கமாக்கி விட்டு, இணையை ஹராமாக்கவில்லை. மாறாக இரண்டையும் தான் தடுத்துள்ளான்.

இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : "குறிக்கோள், நோக்கங்கள், அதன் பக்கம் இட்டுச்செல்லும் காரணங்கள் வழிகளின்றி அடைய முடியாது எனும் போது, அக்காரணங்கள், வழிகள் அந்த நோக்கங்களைத் துயர்ந்ததாகவும், அவற்றுடன் சேர்த்துக் கணிக்கப்படக்கூடியதாகவுமே உள்ளன.

ஹராமாக்கப்பட்டவை, பாவங்கள், இவற்றினுடைய வழிகள். அது வெறுக்கப்பட்டவையா? (மக்ரூஃ), அல்லது தடுக்கப்பட்டவையா? என்பதை அவ்வழிகள் எந்த அளவுக்கு அதன் நோக்கங்களின்பால் இட்டுச்செல்கின்றன, எந்த அளவுக்கு அவற்றுடன் தொடர்புபட்டுள்ளன என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றன.

அதே போன்றுதான் வணக்க வழிபாடுகளுடைய வழிகள். அவை எந்த அளவுக்கு விரும்பத்தக்கது, அனுமதியளிக்கப்பட்டது என்பதை அவற்றின் நோக்கங்களின் பக்கம் இட்டுச் செல்லும் விதத்தைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றன.

ஒரு குறிக்கோளுடைய வழி அக்குறிக்கோளைத் துயர்ந்ததுதான். அவ்விரண்டுமே தேவையானதுதான். என்றாலும் முதலாவது, குறிக்கோள் என்ற ரீதியிலும், மற்றது அதற்கான வழிவகை என்ற ரீதியிலும் வேண்டப்பட்டதாக உள்ளது.

இறைவன் ஒரு விடயத்தைத் தடுக்கும் போது அதன்பால் கொண்டு செல்லும் வழிகள் இருந்தால் அதனை உட்படுத்தல், உறுதிப்படுத்தல்,

அதன் வேலியருகே நெருங்குவதைத் தடுத்தல் போன்றவற்றையும் சேர்த்துத்தான் தடுக்கின்றான். மேலும் அவன் ஹராத்தின்பால் இட்டுச்செல்லும் வழிவகைகளையும், காரணங்களையும் அனுமதித்தால், அது அந்த ஹராத்தை முறித்து, உள்ளங்களை அதன் பக்கம் தூண்டிவிடக்கூடியதாக மாறிவிடும். அல்லாஹ்வுடைய அறிவு, ஞானம் அதை முற்றாக மறுக்கின்றது. அது மாத்திரமின்றி உலக ஆட்சியாளர்களின் அரசியலே அதனை மறுக்கின்றது. ஏனெனில் அவர்களில் ஒருவர் அவருடைய படைக்கோ, பிரஜைக்கோ, குடும்பத்திற்கோ ஒன்றைத் தடுத்துவிட்டு, பின்பு அதன் காரணங்களையும், பாதைகளையும் அனுமதித்தால் அது முரண்பாடாகவே கணிக்கப்படும். (1) "

இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் தனது "இஃலாமுல் முவக்கிஈன் அன் ரப்பில் ஆலமீன்" என்ற நூலில், ஹராத்தின்பால் இட்டுச் செல்லும் வழிகளும் -அது அடிப்படையில் அனுமதிக்கப்பட்டதாக இருந்தாலும்- தடுக்கப்பட்டவையே என்பதற்கான ஆதாரங்களைக் கூறியுள்ளார்கள். அல்லாஹ் கூறுகிறான் :

(1) இஃலாமுல் முவக்கிஈன் - 1/ 108, 109

﴿ وَلَا تَسُبُّوا۟ ٱلَّذِينَ يَدْعُونَ مِن دُونِ ٱللَّهِ فَيَسُبُّوا۟ ٱللَّهَ عَدْوًۢا بِغَيْرِ عِلْمٍ ﴾الأنعام: ١٠٨

"அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைப்பவற்றை நீங்கள் திட்டாதீர்கள். ஏனெனில், அவர்கள் அறியாமையினால் வரம்பு மீறி, அல்லாஹ்வைத் திட்டுவார்கள்". (அல்குர்ஆன்– 6: 108)

இவ்வசனத்தில் இணைவைப்பவர்கள் அல்லாஹ்வைச் சாடக்கூடாது என்பதற்காக அவர்களுடைய கடவுள்களை நிந்திப்பதை, சாடுவதை இறைவன் தடை செய்துள்ளான். அவர்களுடைய கடவுள்களை நிந்திப்பது அல்லாஹ்வுக்காக வைராக்கியம் கொள்ளவும், அவர்களை பெரும் கோபங்கொள்ளச் செய்யவும், அவர்களுடைய கடவுள்களை இழிவுபடுத்தவும் உதவும் என்றபதற்காக அது தடை செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அல்லாஹ்வை நிந்திக்காமலிருப்பதிலுள்ள நலவு, நாங்கள் அவர்களுடைய கடவுள்களை நிந்திப்பதிலுள்ள நலவை விடப் பொருத்தமானதாக உள்ளது. இது விழிப்புணர்வூட்டுவதற்காக, (அதற்கும் மேலாக) அனுமதிக்கப்படாத ஒன்றைச் செய்ய,

அனுமதிக்கப்பட்ட ஒன்று காரணமாகக் கூடாது என்பதைத் தெளிவாக உணர்த்துவது போன்றுள்ளது.(1)

மேலும் இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் "குறிக்கோள்களுக்கு என்ன சட்டமோ, அதன் வழிவகைகளுக்கும் அதே சட்டம் தான்" என்பதற்கு சுமார் 99 ஆதாரங்களைக் கூறியுள்ளார்கள். அவற்றிலிருந்து 75வது ஆதாரத்தை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறோம்.

"நபியவர்கள் ஸமூத் கூட்டம் அழிந்த இடத்தைத் தாண்டும் போது, அதே போன்ற வேதனை இவர்களுக்கும் ஏற்படக்கூடாது என்பதற்காக அழுது கொண்டே போகுமாறு தம் தோழர்களை ஏவினார்கள். அழாமல் அவ்விடத்தில் நுழைவதை வேதனை ஏற்படுவதற்குரிய காரணமாக நபியவர்கள் ஆக்கியுள்ளார்கள். (2)

(1) இஃலாமுல் முவக்கிஈன் - 3/ 110.
(2) இஃலாமுல் முவக்கிஈன் - 3/ 121.

**கலீபா உமர் ரழி அவர்களுடைய சம்பவம்:**

மஃரூர் பின் ஸுவைத் அல்அஸதீ (ரஹ்) கூறினார்கள்: "நான் அமீருல் முஃமினீன் உமர் பின் ஹத்தாப் (ரழி) அவர்களுடன் வெளியில் சென்றேன். நாம் (தூங்கி) அதிகாலையில் எழுந்ததும், எங்களை வைத்து அவர் பஜ்ர் தொழுகை நடத்தினார். பின்பு மக்கள் ஏதோ திசையை நோக்கிப் போவதைக் கண்ட உமர் (ரழி) அவர்கள், "இவர்கள் எங்கே செல்கிறார்கள்? " என்று கேட்டார்கள். அதற்கு "அமீருல் முஃமினீனே! இந்த இடத்தில் நபி (ஸல்) அவர்கள் தொழுத ஒரு மஸ்ஜித் இருக்கின்றது. இவர்களும் அங்கு சென்று தொழுகின்றார்கள்" என பதிலளிக்கப்பட்டது. உடனே அவர், "இது போன்ற செயலின் காரணமாகத்தான் உங்கள் முன்னோர் அழிந்தனர். அவர்கள் தங்கள் நபிமார்களின் சுவடுகளைத் தேடிச் சென்று, அந்த இடங்களை வழிபடும் தளங்களாக எடுத்துக் கொண்டார்கள். யார் இப்பள்ளியில் தொழுகை நேரத்தை அடைந்து கொள்கிறாரோ அவர் அதில் தொழுது கொள்ளட்டும். அவ்வாறில்லையெனில் அவர் போய்க்கொண்டே இருக்கட்டும். வேண்டுமென்றே

அதை நாடிச் செல்ல வேண்டாம்" என்று கூறினார்கள். (1)

**புராதன இடங்களின் இரண்டாவது வகை :**

புராதன இடங்கள் என்பது, பிரயாணத்தின் போது நபியவர்கள் தாண்டிச் சென்ற இடங்கள், அல்லது தண்டிக்கப்பட்ட சமூகத்தினரின் இடங்களை(த் தரிசித்தலை)க் குறிக்கும்.

இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நபி (ஸல்) அவர்கள் "அல்

(1) இச்சம்பவத்தின் அறிவிப்பாளர் வரிசை சரியானதாகும். அதிலுள்ள அறிவிப்பாளர் அனைவரும் புஹாரி, முஸ்லிமில் வரக்கூடிய அறிவிப்பாளர்களே. "ஹர்மலா" என்பவரைத் தவிர. அவர் முஸ்லிமில் வரக்கூடிய அறிவிப்பாளர். இதில் சில மாற்றங்களுடனும், கூட்டல்களுடனும் இப்னு அபீ ஷைபாவிலும் (2/376, 377), ஸஈத் இப்னு மன்ஸூர் என்ற ஹதீஸ் தொகுப்பிலும் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே போன்று "அஃமஷ்" என்பவரைத் தொட்டும் "அபூ முஆவியா" என்பவர் அறிவிக்கக்கூடிய அறிவிப்பு இப்னு தைமியாவுடைய "அல் இக்திழாஃ" என்ற நூலில் (2/744) இடம் பெற்றுள்ளது.

ஹிஜ்ர்" (1) என்ற இடத்தைத் தாண்டிச் சென்ற போது، பின்வருமாறு கூறினார்கள்: "அக்கிரமம் புரிந்தவர்களின் வசிப்பிடங்களில் அவர்களுக்குக்கிடைத்த அதே தண்டனை உங்களுக்குக் கிடைத்துவிடுமோ என்றஞ்சி, அழுதபடியே நுழையுங்கள்". பிறகு அவர்கள் சேண இருக்கையின் மீது இருந்தபடியே தம் போர்வையால் தம்மை மறைத்துக் கொண்டார்கள்.(2)

இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் அழுதபடியே" என்ற நபியவர்களின் கூற்றுக்கு, நுழையும் போது மாத்திம் என்று அர்த்தம் கிடையாது. மாறாக அந்த இடத்தைத் தாண்டி முடியும் வரை என்பது தான் அர்த்தம். (3)

---

(1) ஹிஜ்ர் என்பது ஸமூத் கூட்டத்தார் வாழ்ந்த இடம். இவர்களுக்கு ஸாலிஹ் (அலை) அவர்கள் தூதராக அனுப்பப்பட்டார்கள். தற்போது இது "மதாஇன் ஸாலிஹ்" என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

(2) புஹாரி (3380), முஸ்லிம் (2980).

(3) பத்ஹுல் பாரி (1/530)

மற்றோர் அறிவிப்பில்، "மக்கள் நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து ஸமூத் கூட்டத்தார் வாழ்ந்த "அல் ஹிஜ்ர்" என்ற இடத்தில் இறங்கினார்கள். அங்குள்ள கிணறுகளிலிருந்து மக்கள் நீர் இரைத்தார்கள். அதனைப் பயன்படுத்தி، மாவு பிசைந்தார்கள். (இதைக் கண்ட) நபியவர்கள் அவர்கள் இரைத்த நீரைக் கொட்டும் படியும், பிசைந்த மாவை ஒட்டகங்களுக்கு தீனியாகப் போடும் படியும் பணித்தார்கள். மேலும் ஒட்டகங்கள் தண்ணீர் குடிக்க வரும் கிணறுகளிலிருந்து நீர் இரைக்கும் படியும் ஏவினார்கள்." (1)

மற்றோர் அறிவிப்பில்، "தபூக் யுத்தம் நடந்த ஆண்டு நபியவர்கள் மக்களுடன் சேர்ந்து ஸமூது கூட்டத்தாருடைய வீடுகளுள்ள "அல் ஹிஜ்ர்" எனும் இடத்தில் இறங்கினார்கள். மக்கள் ஸமூத் கூட்டத்தார் நீர் குடித்த கிணறுகளிலிருந்து நீர் இரைத்து, அதன் மூலம் மாவு பிசைந்தார்கள். இறைச்சி சமைப்பதற்காக பானைகளை வைத்தார்கள். உடனே நபியவர்கள் ஏவ, அவர்கள் பானையிலுள்ளவற்றைக் கொட்டினார்கள். பிசைந்த மாவை ஒட்டகத்திற்கு தீனியாகப் போட்டார்கள்.

(1) முஸ்லிம் (2981)

பின்பு நபியவர்கள் அவர்களைச் சேர்த்துக் கொண்டு, ஒட்டகங்கள் தண்ணீர் குடிக்கும் கிணற்றிற்குப் பயணித்தார்கள். தண்டிக்கப்பட்ட கூட்டத்தினர் இருந்த இடங்களில் நுழைய வேண்டாமென்று அவர்களைத் தடுத்தார்கள். "அவர்களுக்கேற்பட்டதைப் போன்று உங்களுக்கும் ஏற்படுமென்று நான் அஞ்சுகிறேன். எனவே நீங்கள் அவர்களிருந்த இடத்திற்குச் செல்ல வேண்டாம்" என்று கூறினார்கள். (1)

ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "தங்களுக்குத் தாங்களே அநியாயம் செய்து கொண்டவர்கள் வசித்த இடங்களுக்குச் செல்ல வேண்டாமென்று நபியவர்கள் தடுத்துள்ளார்கள். அவ்விடங்களைத் தாண்டிச்செல்ல நேர்ந்தால் வேகமாக செல்லும் படி வழிகாட்டியுள்ளார்கள். இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நபி (ஸல்) அவர்கள் "ஹிஜ்ர்" பிரதேசத்தைக் கடந்து சென்ற போது, தமக்குத் தாமே அநீதமிழைத்துக் கொண்டவர்களின் வசிப்பிடங்களில் அழுதுகொண்டல்லாமல் வேறு விதமாக நுழையாதீர்கள். உங்களுக்கு அழ முடியாவிட்டால் (இறைத் தண்டனையாக)

(1) முஸ்னத் அஹ்மத் - (10/191, 192) (5984)

அவர்களைத் தீண்டிய வேதனை உங்களையும் தீண்டிவிடுமோ எனும் அச்சத்தின் (காரணமாக) அவ்விடங்களில் நுழையாதீர்கள்". என்று கூறினார்கள். பிறகு தம் தலையை தம் மேலங்கியால் மறைத்துக்கொண்டு அந்தப் பள்ளத்தாக்கைக் கடக்கும் வரை வேகமாகப் பயணித்தார்கள்.

குறிப்பாக இந்த இடத்தில் வந்துள்ள தடையுத்தரவு கடுமையானதாக உள்ளது. இதனால் தான் அவர்கள் ஸமூத் கூட்டம் பயன்படுத்திய தண்ணீரை வைத்து மாவு பிசைந்த போது, அதனை பிராணிகளுக்கு ஊட்டுமாறும், அதனை உட்கொள்ள வேண்டாமென்றும் பணித்தார்கள். இதை விட தெளிவான ஹராம் வேறு எது உள்ளது? அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரியக்கூடியவர்கள். அதுவும் அதிக தேவைகள், கஷ்டங்கள் இருந்த நேரத்தில் நடந்த சிரமமான ஒரு யுத்தம். அது தான், பாதுகாக்கப்பட்ட எந்தவொரு பதிவேடும் அவர்களுடைய தொகையை மட்டிட முடியாத அளவிற்கு அதிகமானோர் கலந்து கொண்ட தபூக் யுத்தம். அவர்கள் வாழ்க்கைச் சிரமத்துடனும், பொருளாதாரப் பற்றாக் குறையுடனும் வெளிப்பட்டுச் சென்றார்கள். அப்படியிருந்தும் அவர்களுடைய பெறுமதி மிக்க

உணவான இந்த பிசைந்த மாவால் செய்யப்பட்ட உணவை சாப்பிட வேண்டாமென்று நபியவர்கள் ஏவுகிறார்கள். அவ்வாறு அனுமதியளிக்க வழியிருந்தால் அந்த அனுமதியைப் பெற்றுக் கொள்ள மிகவும் தகுதியுள்ளவர்கள் அந்த நபித்தோழர்கள் தான். எனவே அந்த ஊருக்குச் செல்வது, நீர் இரைப்பது ஆகியவற்றை விட்டும் நபியவர்கள் தடுத்தது, ஹராம் என்ற அடிப்படையில்தான் என்பது தெளிவாக அறியப்பட்டு விட்டது." (1)

இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "யார் கோபத்திற்குள்ளானவர்கள், தண்டிக்கப்பட்டவர்கள் வாழ்ந்த இடத்தைத் தாண்டிச் செல்கிறாரோ، அவருக்கு அதில் நுழையவோ, தரித்து நிற்கவோ முடியாது. மாறாக வேகமாகத் தாண்டிச் சென்றுவிட வேண்டும். அந்த இடத்தைத் தாண்டும் வரை அவர் தனது ஆடையால் மறைத்துக் கொண்டு, அவர் அழுத நிலையிலும்,

(1) ஷரஹுல் உம்தா - தொழுகையின் பாடம் - பக்: 507-510, மேலும் இது பற்றிய தகவலுக்கு:, மஜ்மூஃ பதாவா (15/324), இக்திழாஉஸ் ஸிராதில் முஸ்தகீம் (1/233-238), தப்ஸீர் அல்குர்துபீ (10/45).

படிப்பினை பெறக்கூடிய நிலையிலுமே தவிர அங்கு நுழையக்கூடாது". (1)

இமாம் இப்னு ரஜப் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "இந்த ஹதீஸ் தண்டனை இறங்கிய இடங்களுக்குப் பரிபூரண உள்ளச்சத்துடனும், படிப்பினையுடனுமே தவிர நுழைய முடியாது என்பதைத் தெளிவாகக் கூறுகின்றது. அப்பரிபூரண நிலையானது அல்லாஹ்வின் அச்சத்தால் அழுவதும், அந்த இடத்தில் இருந்தவர்களுக்கு இறங்கிய வேதனையைப் பயப்படுவதுமாகும். இத்தகைய முறையில் அல்லாமல் இங்கு நுழைவது, அவர்களுக்கு ஏற்றப்பட்ட வேதனை ஏற்படலாமென அஞ்சப்படுகிறது. இது போன்ற இடங்களில் வசிக்கவோ, தரிக்கவோ கூடாதென்று இந்நபிமொழி சுட்டிக்காட்டியுள்ளது. இமாம் கத்தாபியும், இன்னும் சில அறிஞர்களும் இதைத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்". (2)

(1) ஸாதுல் மஆத் (3/560), இது பற்றி மேலதிக தகவல்களுக்கு இதே நூலில் (2/255), அல் ஜவாபுல் காபீ، பக்: 94

(2) பத்ஹுல் பாரி 3/237, இது பற்றி மேலதிகத் தகவல்களுக்கு: அஃலாமுல் ஹதீஸ் 1/394.

ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "நபி (ஸல்) அவர்கள் அந்த இடத்தை நாடிச் சென்று தொழவில்லை. மாறாக அந்த இடத்தில் இறங்கினார்கள் என்பதற்காக அதில் தொழுதார்கள். என்கிற போதும், நபியவர்களுடைய நோக்கத்த்தில் அவருக்கு உடன்படாமல் வெளிரங்கச் செயலில் மாத்திரம் அவருடன் கூட்டுச் சேர்வது அவரைப் பின்பற்றுவதாக அமையாது. மாறாக அந்த இடத்தைத் தொழுகையைக் கொண்டு குறிப்பாக்குவது, எந்தக் காரணத்திற்காக வேதக்காரர்கள் அழிக்கப்பட்டார்களோ அந்த வகை பித்அத்களில் உள்ளது என உமர் (ரழி) அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். என்கிற போதும், அவ்வாறு செய்பவன் வெளிரங்கமாக நபியவர்களுக்கு ஒப்பாகுகிறான். உள்ளத்தால் செய்யக்கூடிய அமலான، நோக்கத்தில் யஹூதி, நஸாராக்களுக்கு ஒப்பாகுகிறான்". (1)

மேலும் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "அபூபக்கர், உமர், உஸ்மான், அலி (ரழியல்லாஹு அன்ஹும்) அதே போன்று ஆரம்பத்தில் இஸ்லாத்தில் நுழைந்த

(1) மஜ்மூஃ பதாவா 1/128.

முஹாஜிரீன்கள், அன்ஸாரிகள் அனைவரும் மதீனாவிலிருந்து மக்காவிற்கு ஹஜ்ஜாஜிகளாகவும், உம்ராச் செய்பவர்களாகவும் பிரயாணிகளாகவும் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களில் யாரும் நபியவர்கள் தொழுத இடங்களைத் தேடிச் சென்று தொழுததாக எந்த ஒரு அறிவிப்பும் வரவில்லை. அவ்வாறு செய்வது அவர்களிடத்தில் விரும்பத்தக்கதாக இருந்திருந்தால் அவர்கள் அதனை முந்திக் கொண்டு செய்திருப்பார்கள் என்பது அறியப்பட்டதே. ஏனெனில் அவர்கள் நபியவர்களுடைய ஸுன்னாவை ஏனையவர்களை விட அறிந்தவர்களும், பின்பற்றுபவர்களும் ஆவர்". (1)

முஹம்மத் பின் வழ்ழாஹ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "அல்குர்ஆனிலும், ஸஹீஹான ஹதீஸ்களிலும் இடம்பெற்றுள்ள, மதீனாவிலுள்ள குபா, உஹது போன்றவற்றைத் தவிர ஏனைய மஸ்ஜிதுகளுக்கும், சுவடுகளுக்கும் செல்வதை இமாம் மாலிக் (ரஹ்) அவர்களும், ஏனைய மதீனா

(1) அல் இக்திழா:. 2/748.

அறிஞர்களும் வெறுக்கக்கூடியவர்களாக இருந்தார்கள்". (1)

<u>குறிப்பு</u>: இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "தண்டனை இறங்காத இறை நிராகரிப்பு (குப்ர்), பாவங்கள் நடைபெறும் இடங்கள் போன்றவற்றை ஈமானுக்கான, வழிபாட்டிற்கான இடமாக மாற்றினால் அது சிறந்த விடயமே. ஏனெனில் நபியவர்கள் தாஇப் வாசிகளுக்கு அவர்களது சிலைகள் இருந்த இடத்தை மஸ்ஜிதாக மாற்றுமாறு பணித்தார்கள். யமாமா வாசிகளுக்கு அவர்கள் முன்னர் வழிபட்டுக்கொண்டிருந்த இடத்தை மஸ்ஜிதாக எடுத்துக்கொள்ளுமாறு ஏவினார்கள். நபி (ஸல்) அவர்களுடைய மஸ்ஜித் (அல் மஸ்ஜிதுந் நபவி) இணைவைப்போருடைய அடக்கஸ்தலமாக இருந்தது. அம்மண்ணறைகளைத் தோண்டி எடுத்ததன் பின்னர் அவ்விடத்தை மஸ்ஜிதாக மாற்றினார்கள்.

காபிர்களுக்கு வேதனை இறங்கிய இடங்களிலேயே (வசிப்பதில்) அவர்களுடன் கூட்டுச்சேரக் கூடாதென்று ஷரீஆ தடையுத்தரவு பிறப்பித்திருக்கும் போது அவர்கள் செய்யக்கூடிய

(1) இப்னு வழ்ழாஹ் தனது தொகுப்பில் (இல 102) இதனை அறிவித்துள்ளார்கள்.

செயல்களில் அவர்களுடன் எவ்வாறு கூட்டுச் சேர்வது.........?. (1)

**3. நபியவர்கள் சரீரம் சம்பந்தப்பட்ட சுவடுகள் :**

சரீரம் சம்பந்தப்பட்ட சுவடுகள் என்பதன் பொருள் நபியவர்களின் சரீரம் பட்ட இடங்களாகும். அதைக் கொண்டு பரக்கத் தேடுவது அனுமதிக்கப்பட்டதாகும். அதற்கான ஆதாரமாக பின்வரும் நபி மொழி அமைந்துள்ளது. அபூ ஜுஹைபா (ரழி) அவர்கள் கூறினார்கள்: "நபி (ஸல்) அவர்கள் நண்பகல் நேரத்தில் எங்களிடம் புறப்பட்டு வந்தார்கள். அவர்களுக்கு வுழூச் செய்ய தண்ணீர் கொண்டுவரப்பட்டு, அதில் அவர்கள் வுழூச் செய்தார்கள். அவர்கள் மீதம் வைத்த தண்ணீரை மக்கள் தங்களின் மீது தடவிக்கொண்டார்கள். (2)

மற்றோர் அறிவிப்பில் "நபி (ஸல்) அவர்கள் வுழூச் செய்தால், அவர்கள் மீதம் வைக்கிற தண்ணீரை எடுத்துக் கொள்வதில் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக் கொள்வார்கள்".(3)

---

(1) அல் இக்திழா... 1/237, 238.

(2) புஹாரி 187

(3) புஹாரி 189

மிஸ்வர் பின் மஹ்ரமா, மர்வான் பின் ஹகம் (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகியோர் கூறினார்கள்: "நபியவர்கள் ஹுதைபிய்யாக் காலத்தில் புறப்பட்டார்கள்....." அந்த நபிமொழியில் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது: "அவர் எச்சில் துப்பினால்، அவரின் தோழர்களில் ஒருவர் அதனை தம் கையில் ஏந்திக் கொண்டு, அதை தம் முகத்திலும், மேனியிலும் தேய்த்துக் கொள்வார்". (1)

இது அல்லாஹ் நபியவர்களிடத்தில் வைத்துள்ள சிறப்பு, பரகத் (அபிவிருத்தி) போன்றவற்றின் காரணமாக அவர்களுக்கு மாத்திரம் சொந்தமான சிறப்பம்சமாகும். இவ்விடயத்தில் அவரை வைத்து ஏனையோரை அளவிட முடியாது. இதனால் தான் நபித்தோழர்கள், அபூபக்கர், உமர், உஸ்மான், அலீ (ரழியல்லாஹு அன்ஹும்) போன்ற சிறந்தவர்கள் அவர்களில் இருந்தும் நபி உயிருடன் இருக்கும் போதோ, மரணித்த பின்போ இவ்வாறு நடந்து கொள்ளவில்லை". (2)

---

(1) புஹாரி 2732

(2) அப்துல் முஹ்ஸின் அல் அப்பாத் என்பவருடைய மார்க்கத்திலில்லாத சுவடுகளை கண்ணியப்படுத்துவதை விட்டும் எச்சரித்தல் என்ற அரபு மொழி நூலிலிருந்து ஒரு சில மாற்றங்களுடன் எடுக்கப்பட்டது.

எனவே உண்மையை உண்மையாக எங்களுக்கு எடுத்துக் காட்டி, அதனைப் பின்பற்றவும், பொய்யை பொய்யாக எங்களுக்கு எடுத்துக்காட்டி, அதனைத் தவிர்ந்து கொள்ளவும் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கிறேன்.

அல்லாஹ்வே எல்லாம் அறிந்தவன். எங்களுடைய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் கிளையாளர்கள், தோழர்கள் அனைவர் மீதும் அல்லாஹ் சாந்தியும், சமாதானமும் அருள்வானாக !

**துணை நின்றவை**


1. அல்குர்ஆன்.
2. தப்ஸீர் இப்னு கஸீர்.
3. தப்ஸீர் அல் குர்துபீ.
4. ஸஹீஹுல் புஹாரி.
5. ஸஹீஹ் முஸ்லிம்.
6. ஸுனன் அபீ தாவூத்.
7. ஸுனன் இப்னு மாஜாஃ.
8. முஸ்னத் அஹ்மத்.
9. முஸன்னப் இப்னு அபீ ஷைபா.
10. ஸுனன் ஸஈத் பின் மன்ஸூர்.
11. முஸ்னத் அப்த் பின் ஹுமைத்.
12. அஃலாமுல் ஹதீஸ்.
13. பத்ஹுல் பாரீ ஷரஹ் ஸஹீஹில் புஹாரி (இமாம் இப்னு ஹஜருக்குரியது.)
14. மஜ்மூஃ பதாவா (இமாம் இப்னு தைமிய்யாவுக்குரியது).
15. இக்திழாஉஸ் ஸிராதில் முஸ்தகீம் (இமாம் இப்னு தைமிய்யாவுக்குரியது)
16. இஃலாமுல் முவக்கிஈன் (இமாம் இப்னுல் கய்யிமுக்குரியது).

17. ஸாதுல் மஆத் (இமாம் இப்னுல் கய்யிமுக்குரியது).
18. அல்ஜவாபுல் காபி(F) (இமாம் இப்னுல் கய்யிமுக்குரியது).
19. அல் இஃதிஸாம் (இமாம் ஷாதிபீயுக்குரியது).
20. ஷரஹுல் உம்தா.
21. அல் பாஇஸ் அலா இன்காரில் பிதஇ வல்ஹவாதிஸ் (இப்னு அபீ ஷாமாவுக்குரியது).
22. கிதாபுல் ஹவாதிஸி வல் பிதஃ (இமாம் தர்தூஷிக்குரியது).
23. அத்துரருஸ் ஸனிய்யா.